


# JAMAAT UL SAHIH AL ISLAM – TAMIL NADU



ஜுமுஆ பேருரை

தலைப்பு :

## நபி மற்றும் நம்பிக்கையாளர்களுக்கு அல்லாஹ்வின் வாக்குறுதி

## பகுதி – 3

24 January 2020

(28 Jamadi'ul Awwal 1441 AH )

ஹஸ்ரத் கலீப்.ஃ.த்துல்லாஹ்
முனீர் அஹ்மது அஸீம் (அலை)

வெளியீடு

அமீர்,
ஜமா அத் தமிழ்நாடு
Phone No :- 917502272774

بسم الله الرحمن الرحيم

# *The Promise of Allah to the Prophet & the Believers (Pt.3 )*

## *நபி மற்றும் நம்பிக்கையாளர்களுக்கு அல்லாஹ்வின் வாக்குறுதி (பகுதி 3)*

உலகெங்கிலும் உள்ள தனது அனைத்து ஸஹாபாக்கள் புதிய சஹாபாக்கள் மற்றும் அனைத்து முஸ்லீம்களுக்கும் தனது ஸலாத்தினை தெரிவித்த பிறகு ஹஸ்ரத் ஃகலீபத்துல்லாஹ் (அய்) அவர்கள் தஷ்ஹத் தஅவூது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதி **"நபி மற்றும் நம்பிக்கையாளர்களுக்கு அல்லாஹ்வின் வாக்குறுதி பகுதி-3"** என்ற தலைப்பில் **ஜுமுஆப் பேருரையை** வழங்கினார்கள்,

அல்லாஹ் அவனுடைய அருளால் என்னை செயல்படவைத்து - வாய்ப்பு, தைரியம் மற்றும் ஞானத்தினைக் கொண்டு என்னை பலப்படுத்தி இத்தலைப்பை மிகவும் விளக்கமாக நீங்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்நூற்றாண்டில் உங்கள் முன் எடுத்துரைக்க வைத்துள்ளான். எனவே நீங்கள், உங்களுக்கு தூதுச்செய்தி கிடைக்கவில்லை என்றோ உங்களுக்கு ஒருவரும் விளக்கம் தரவில்லை என்றோ, இதுபற்றி அறிவூட்டப்படவில்லை என்றோ கூற முடியாது.

எனவே, இந்த சகாப்தத்தின் ஃகலீஃபதுல்லா ஹ் என்ற வகையில் , நான் செய்ய வேண்டிய (நிர்ணயிக்கப்பட்டுள்ள) வேலையை ச் செய்கிறேன் . அல்லாஹ்வே இம்முக்கிய செய்தியை அளிக்க என்னை வழிநடத்தி இயக்குகின்றான்; ஏனெனில் நாளை நீங்கள் உங்களை படைத்தவன் முன் நிற்கும்போது நீங்கள் எதையும் அறிந்திருக்கவில்லை என்று கூறமுடியாது. "யாரும் எதையும் சொல்லவில்லை; எனக்கு செய்திகிடைக்கவில்லை" என்று உங்களால் கூறமுடியாது. உங்களைப் படைத்தவனிடம் உங்களால் இதைக் கூற முடியாது! இறை அறிவுறுத்தலின்படி அல்லாஹ் எனக்குக் கொடுத்துள்ள பணியை நான் செய்கிறேன். என்னை ஏற்றுக்கொள்வதற்கோ அல்லது நிராகரிப்பதற்கோ நீங்களே பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். இதை ஏற்றுக்கொள்வதோ, இறைசெய்தியிலிருந்து முகந்திருப்பிக் கொள் வதோ உங்களுடைய விருப்பம். நீங்கள் ஒவ்வொருவரும் உங்களுடைய செயல்களுக்குப் பொறுப்பாளியாவீர்கள், தீர்ப்புநாளில் படைத்தவனால் கணக்குக் கேட்கப்படவுள்ளீர்கள்.இத்தற்காலிக உலகில், நாம் அனைவரும் பயணிகளாவோம், நாம் இந்த உலகில் தற்காலிகமாகவே இருந்து கொண்டிருக்கின்றோம்; எனவே நாம் மறுமையைப் பற்றி சிந்திக்கவேண்டியுள்ளது, ஏனெனில் மரணத்திற்குப் பின்னுள்ள வாழ்க்கையே நிரந்தரமானதாகும்.

இப்போது நான் சூரா அன்-நூரில் உள்ள ஒரு வசனத்தை (24:56) மேற்கோள் காட்டுகிறேன்.அதில்அல்லாஹ் : **"அவன் அவர்களுக்காக பொருந்திக் கொண்ட மார்க்கத்தில் அவர்களை நிச்சயமாக நிலைப்படுத்துவதாக** " கூறுகின்றான். இதுபோல சூரா அல்-மாயிதா (5:4)ல் அல்லாஹ் மேலும் கூறுகின்றான், **"இன்றைய தினம் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தை பரிபூரணமாக்கி விட்டேன்** ; **மேலும் நான் உங்கள் மீது என்**

**அருட்கொடையைப் பூர்த்தியாக்கி விட்டேன்; இன்னும் உங்களுக்காக நான் இஸ்லாம் மார்க்கத்தையே (இசைவானதாகத்) தேர்ந்தெடுத்துள்ளேன்".**

இதன் பொருள் என்னவென்றால் அல்லாஹ் (சுபஹ்)-வால் ஏற்படுத்தப்பட்டுள்ள, அருள்புரியப்பட்டுள்ள அமைப்பின் மூலம் இஸ்லாம் பலத்தையும் , கண்ணியத்தையும் பெறும் என்பதை முன்னிறுத்தி இறுதி அறிவிப்பை வெளியிடுவான் அதில் அவன் தொடர்ந்து இறைஅருளை, அவனது தேர்ந்தெடுக்கப்பட்ட அடியாரை, அவனது ஃகலீபத்துல்லாஹ்வை அனுப்பிக் கொண்டேயிருப்பான், அவனது தேர்ந்தெடுக்கப்பட்ட அடியாரின் மூலமாகவே அவன் உலகளவில் இஸ்லாமிய மார்க்கம் வெற்றியடைய அனுமதிப்பான். நான் ஏற்கெனவே கடந்த இரண்டு வெள்ளிக்கிழமை உரைகளில் விளக்கியதுபோல், புனித நபி(ஸல்) அவர்கள் இஸ்லாத்தின் விதையை விதைத்தார்கள், புனிதமான, பரிபூரணமான ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) விதைத்த அதேப் பணியைத் தொடர்வது கட்டாயமாகும். அவர்கள் இஸ்லாத்தின் விதையை விதைத்தார்கள். ஆனால் இன்று என்ன ஆகிவிட்டது? முஸ்லிம்களுக்கு என்ன ஆகிவிட்டது? இஸ்லாத்தின் உண்மையான போதனைகள் எங்கே போய்விட்டன? நமது அன்பிற்குரிய நபி(ஸல்) அவர்கள் வீணாக்க்கூறவில்லை..***, பிரத்யேகமாக இத்தலைப்பு பற்றிய திருக்குர்ஆனின் வசனம் அருளப்பட்டபோது அதில் அல்லாஹ் கூறுகிறான்: 'வ ஆஹரீன மின்கும் லம்மா யல்ஹகூ பிஹிம்'

**"இவர்களுடன் சேராத (பிற்காலத்த)வர்களுக்காகவும்** "(சூராஅல்ஜூம்ஆ 62:4)

இந்த வசனத்தில் மிகச் சிறந்த முன்னறிவிப்பு உள்ளது , அதில் இந்த உண்மையான போதனைகள் [இஸ்லாத்தின் போதனைகள்] மீறப்படும் இறுதி நாட்களில் புனித நபி (ஸல்) அவர்களின் வருகையின் நோக்கம் மற்றும் இஸ்லாத்தின் போதனைகள் குறித்து சிலர் கேள்வி எழுப்பக்கூடும், அவ்வாறு

நடக்கும்போது அல்லாஹ் (சுபஹ்) நிச்சயமாக இந்த ஸஹீஹ் அல் இஸ்லாத்தை (உண்மை இஸ்லாத்தைப்) பாதுகாக்க ஒரு பிரதிநிதியை அனுப்புவான். இவ்வசனம் அருளப்பட்டபோது, ஹஸ்ரத் முஹம்மத்(ஸல்) அவர்கள் நன்கு அதனைப் புரிந்து கொள்ள வைத்தார்கள். ஏனெனில் அவர்கள் கூறினார்கள்: “லவ் கானல் ஈமானு முஅல்லகன் பிஸ்ஸுரைய்யா லனாலுஹூ லரஜ்லும் மின் ஹாவுலாஇ” **புஹாரி-கிதாபுல் த**ஃப்**ஸீர்**).

அவர்கள் இவ்வார்த்தைகளை கூறும்போது, அவர்கள் தமது கையை ஸல்மான் ஃபார்ஸி அவர்களின் தோளின் மீது வைத்தார்கள், ஸல்மான் ஃபார்ஸி பாரசீக வம்சத்தை சார்ந்தவர்கள் ஆவார்கள்..இம்முன்னறிவிப்பு கடந்த நூற்றாண்டின் மஸீஹ் ஆகிய ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹமத்(அலை) அவர்களின் காலத்தில் நிறைவேறிற்று., ஆனால் இம்முன்னறிவிப்பு இதோடு நிறைவு பெற்றுவிடாது; தற்காலத்திலும் அல்லாஹ் அனுப்பிய்யள்ள இந்த எளிய அடியானின் வருகையால் அதுத் தொடர்ந்து உணரப்படுகிறது. அல்லாஹ்வால் அனுப்பப்பட்டுள்ள இந்த எளிய அடியான் புனித நபி(ஸல்) அவர்களின் பணியைத் தொடரக்கூடிய அடியானும், பாதுகாவலனும் ஆவேன்; மேலும் நான் புனித நபி(ஸல்) அவர்களின் மீதும் மதிப்பிற்குறிய வாக்களிக்கப்பட்ட ஹஸ்ரத் மஸீஹ்(அலை) அவர்களின் மீதும் உறுதியான நம்பிக்கைக் கொண்டவனாவேன். ஹஸ்ரத் மஸீஹ் மவூத் (அலை) அவர்களின் மஸீஹ் வாதத்தை ஹஸ்ரத் முஹம்மத்(ஸல்) அவர்களின் உம்மத்தை சாரத ஒருவரால் எவ்வாறு செய்யமுடியாதோ அதேப்போன்று இக்காலத்தின் ஃ**கலீபத்துல்லாஹ்**வாகிய அல்லாஹ்வின் அடியானும் ஹஸ்ரத் முஹம்மத்(ஸல்) அவர்களின் உம்மத்தை சாரதவனாகவோ அல்லது ஹஸ்ரத் மஸீஹே மவூத்(அலை) அவர்களின் ஜமாஅத்தை சாராதவனாகவோ இருக்கமுடியாது. எனவே, இஸ்லாத்தின் (ஸஹீஹ் அல் இஸ்லாம்) அசல் போதனைகளை உயிர்ப்பிக்க அல்லாஹ்வால் தேர்ந்தெடுக்கப்பட்டவரை

புனிதநபி (ஸல்) மற்றும் மதிப்பிற்குறிய வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சமுதாய வட்டத்திலிருந்து பிரிக்கவோ விலக்கவோ முடியாது. அவர் இவ்விருவரையும் மிக உறுதியாக பின்பற்றுபவராக இருக்கவேண்டும்: முதலாவது ஃ காத்தமுன்நபிய்யீன் (நபிமார்களுக்கெல்லாம் முத்திரை), அடுத்தது காத்தமுல்குலஃபா (கலிஃபாக்களுக்கெல்லாம் முத்திரை). நபி கரீம் ஹஸ்ரத் முஹம்மத்(ஸல்) அவர்களிடத்து பற்றுதல் இல்லையென்றால் ஹஸ்ரத்மஸிஹ்மவூத் (அலை) அவர்களின் வருகைக்கூட மதிப்பில்லாமல் போய்விடும்.

எனவே நான் மேற்கோள் காட்டிய ஹதீஸைப் பற்றி [ஹஸ்ரத் அபு ஹுரைரா (ரலி) அறிவித்தார்கள்] , ஹஸ்ரத் முஹம்மது(ஸல்) அவர்கள் கூறுகையில் , நம்பிக்கை (ஈமான்) பூமியில் மறைந்து , கார்த்திகை நட்சத்திரத்தை அடைந்தாலும் ஸுரய்யா என்ற நட்சத்திரத்தை அடையும் வரை , [இந்த ஹதீஸை நான் உங்களுக்கு நபி (ஸல்) அவர்களின் வார்த்தைகளிலிருந்து புரிய வைக்கிறேன்] பின்னர் அல்லாஹ் ஒருவர் அல்லது பலரால் இந்த நம்பிக்கையை மீண்டும் பூமிக்கு கொண்டு வருவான்.

ஆகவே, நம்பிக்கை, இறை போதனை மனித கைகளால் எந்த அளவுக்கு உதாசீனம் செய்யப்பட்டதென்றால் இந்த உண்மையான இஸ்லாமிய போதனைகளை புத்துயிர் பெறவைக்க ஒவ்வொரு முறையும் அல்லாஹ்(சுபஹ்) ஒருவரை அனுப்ப வேண்டியிருந்தது என்பதைப்பற்றி சற்று சிந்தியுங்கள். அல்லாஹ்வால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த இறைஅமைப்பின் தொடர்ச் சிஎவ்வாறானதென்றால், அல்லாஹ் (சுப்ஹ்) தனது கலிஃபத்துல்லாஹ்வை அனுப்புவான், அவர் மிகுந்த மகிமையுடனும், சிறப்புடனும்,தன்னை வெளிப்படுத்துவார்; ஏனெனில் அவர் சுயமே அல்லாஹ்வால் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்பட்டவராவார்.

**"என்னிடமிருந்து உங்களுக்கு நிச்சயமாக நல்வழி(யைக் காட்டும் அறிவுரைகள்) வரும்போது , யார் என்னுடைய (அவ்) வழியைப் பின்பற்றுகிறார்களோ அவர்களுக்கு எத்தகைய பயமும் இல்லை , அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்." (அல்பக்கரா 2:39).**

திருக்குர்ஆனின் இன்னொரு வசனத்தில் அல்லாஹ்(சுபஹ்) கூறுகிறான்: **"அவனே தன் தூதரை நேர் வழியுடனும், சத்திய மார்க்கத்துடனும் அனுப்பி வைத்தான் - முஷ்ரிக்குகள் (இணை வைப்பவர்கள் , இம்மார்க்கத்தை) வெறுத்த போதிலும் , எல்லா மார்க்கங்களையும் இது மிகைக்குமாறு செய்யவே (அவ்வாறு தன் தூதரை அனுப்பினான்.)" (அத்தவ்பா 9:33)**

அல்லாஹ்(swt)வே தன்னுடைய தூதரை (இறை) வழிகாட்டுதலுடன் சத்திய மார்க்கமான ஸ ஹீஹ் அல் இஸ்லாம் எனும் இந்த உண்மையான மார்க்கத்தின் உண்மையான போதனைகள் புத்துயிர் பெற அனுப்புகிறான் என்பது மிகவும் தெளிவாக உள்ளது ; எனவே இதை விட தெளிவான விளக்கங்கள் எதுவும் இல்லை.

நான் குறிப்பிட்ட இரண்டு வசனங்களிலும் ஒரு செய்தியும் , அதனோடு ஒரு எச்சரிக்கையும் உள்ளது அதாவது இந்த தெய்வீக அமைப்பிலிருந்து நீங்கள் உங்களை தனிமைப்படுத்திக் கொண்டாலோஅல்லாஹ் தன் வழிகாட்டுதலுடன் அனுப்பிய தூதரிடமிருந்து விலகிச் சென்றாலோ , உங்களுக்கு இறை அருள் அல்லது முன்னேற்றம் மற்றும் வெற்றி கிடைப்பது சாத்தியமில்லை. இந்தவிளக்கம் [அல்லது உட்குறிப்பு]மேற்கூறிய இந்த வசனங்களில் அமைந்துள்ளது முற்றிலும் தெளிவாக உள்ளது. இது அல்லாஹ்வின் வார்த்தையாகும். அல்லாஹ் தன் சத்திய மார்க்கத்தை பரப்புவதற்காக தனது தூதுச் செய்தி மற்றும் வழிகாட்டுதலுடன் அனுப்பிய தேர்ந்தெடுக்கப்பட்டவரின் வட்டத்தில் இருப்பவர்களுக்கே வெற்றி மற்றும்

அபிவிருத்தி இருக்கும் . எவர் அல்லாஹ் அனுப்பியவரிடம் ஆணவத்துடனும்தற்பெருமையுடன் முகம் திருப்புவாரோ, அவர் தனது அழிவை அடைவார், இவ்வுலகிலும் மறுமையிலும் தோல்வியடைவார்.

கிலாபத்-இ-ராஷிதீன் (நன்கு வழிநடத்தப்பட்ட கலீபாக்கள்) எனும் உண்மையான அமைப்பு இருந்த வரையிலும் இஸ்லாம் மேன்மேலும் முன்னேறி வெற்றியடைந்ததை 1400 ஆண்டுகளுக்கும் மேலானஇஸ்லாமிய வரலாறு சாட்சியமளிக்கிறது. முஸ்லிம்கள் தங்கள் தீய செயல்களால் இந்த அருளை இழந்தபோதுவெற்றி மற்றும் செழிப்பின் சூரியன் மறைந்தது . ஹஸ்ரத் முஹம்மத் (pbuh) அவர்களின் மறைவிற்குபின் இறைவன் முஸ்லிம்களுக்கு மிகச்சிறந்த தலைவர்களை அருளினான், முஸ்லிம்கள் ஒருங்கிணைந்து தவ்ஹீதையும் ஹஸ்ரத் முஹம்மத் (pbuh) அவர்களின் போதனைகளையும் பற்றிப்பிடித்திருந்தால் முஸ்லிம் சமுதாயத்தினால் வெற்றி மேல் வெற்றி பெற முடிந்தது.

அல்லாஹ்வினால் வழி நடத்தப்பட்ட கலிஃபாக்களின் 30 வருட காலகட்டத்தில் இஸ்லாத்தின் புகழ் அரேபியா மட்டுமல்லாமல் உலகின் எல்லா மூலைகளிலும் நிலை பெற்றிருந்தது. “நீங்கள் உண்மையான நம்பிக்கையாளராக இருப்பின் நீங்கள் தாம் உன்னதமானவர்களாக இருப்பீர்கள்” (3:140) என்று சூரா ஆல இம்ரானில் அல்லாஹ் (ஸுப்ஹ்) ஒரு நிபந்தனையுடன் நம்பிக்கை கொண்ட சமுதாயத்திற்கு வாக்குறுதி அளித்துள்ளான். அதாவது, நீங்கள் (முஸ்லிம்கள்) இஸ்லாத்தை கைவிடாதிருந்தால் மட்டுமே வெற்றி பெறுவீர்கள்.

இவ்வாக்குறுதியை நிறைவேற்றும் விதமாக முஸ்லிம்கள் எல்லாத் துறைகளிலும் எல்லா திசைகளிலும் வெற்றி பெற்றுள்ளனர். ஹஸ்ரத் முஹம்மத் (pbuh) அவர்களின் மறைவிற்குப் பிறகு இஸ்லாத்திற்க்கு ஏற்பட்ட

நெருக்கடியான நேரத்தில், கிலா∴பத்தே ராஷிதீன் அமைப்பு நிறுவப்பட்டதன் பின்னர், இஸ்லாத்தின் கொடி கிழக்கு ஆப்கானிஸ்தானிலிருந்து சீன எல்லை வரையிலும் மற்றும் திரிபோலி மற்றும் கிழக்கு ஆ∴ப்ரிக்காவின் வடக்கு பகுதிகளிலும் மற்றும் காஸ்பியன் கடலின் வட பகுதியிலிருந்து தெற்கிலிருக்கும் எத்தியோப்பியா வரையிலும் மிக விரைவாக நிலைநிறுத்தப்பட்டது (மிக உயர் அந்தஸ்துடன்). அல்லாஹ்வால் (ஆன்மீக வழிகாட்டுதலின் படி) வழிநடத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட ∴கலீ∴பாக்களின் முன்னேற்றமும் வெற்றியும் இன்றளவும் இவ்வுலகிற்க்கு ஆச்சரியமளித்துள்ளது.

அச்சமயம் இஸ்லாத்தின் முன்னேற்றம் எந்த அளவிற்க்கு இருந்ததென்றால் மிக வலிமைவாய்ந்த எதிரிகளும் கூட முஸ்லிம்களை தடுக்க வலிமையற்று இருந்தனர். இஸ்லாத்தின் பெருமையும் முஸ்லிம்கள் மீதான மரியாதையும் எந்த அளவிற்க்கு இருந்ததென்றால் மிகப்பெரிய சாம்ராஜியங்களும் பேரரசர்களும் அவர்களின் (முஸ்லிம்களின்) பெயரைக்கேட்டாலே நடுங்கும் நிலையில் இருந்தனர், அவர்களின் பெயர்கள் கூறப்படுவதை கேட்கும் பொழுது அவர்கள் மிகுந்த கண்ணியம் அளித்தனர். உண்மை என்னவென்றால் இன்று கூட வரலாற்றின் அக்காலத்தை ஆய்வு செய்யும் நடுநிலை வரலாற்றாசிரியர்கள் சிறந்த வழிகாட்டுதல் பெற்ற ∴கலீ∴பாக்களின் காலத்தில் இஸ்லாம் அடைந்த மகிமையையும் புகழையும் அறிந்து வியப்படைகின்றனர். பாலைவன வாசிகள் உலகை வெற்றி கொண்டதை அவர்களால் புரிந்து கொள்ளமுடியவில்லை. இது நல்வழி காட்டப்பட்ட ∴கலீ∴பாக்களின் (முயற்சியினால்) விளைந்ததென்பதை அவர்கள் நினைத்துக்கூட பார்ப்பதில்லை. அல்லாஹ் (சுப்ஹ்) அவனுடைய தூதரை தன் வழிகாட்டுதலுடன் அனுப்புகையில், அவர் (அதாவது, அல்லஹ்வின் தூதர், ∴கலீ∴பத்துல்லாஹ்) பேசுவதை நீங்கள் கேட்கும் போது, உண்மையில்

அல்லாஹ்வே (அவர் மூலமாக) பேசுகிறான்; நம்பிக்கையாளர்களுக்கு நற்செய்தி அளிக்கின்றான்.

நான் கூறுகிறேன்: நற் செயல் செய்யும் நம்பிக்கை கொண்ட சமுதாயத்தினரே! இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஃகலீஃபா அதாவது ஃகலீஃபத்துல்லாஹ், ஒரு சிறந்த இறை அருளாகும், எனவே அவரை மரியாதையுடன் நடத்துங்கள்; ஏனெனில் அல்லாஹ்(சுபஹ்) அவரை உங்களிடையே அனுப்பி அல்லாஹ்(சுபஹ்) அவர் மூலமாக பேசுகின்றான். உங்களில் பெரும்பாலார் ஈமானில் உறுதியாக நிலை நின்று நற்செயல் செய்வதை விடாமல் தொடர்வீர்களேயானால், உங்கள் மீது அல்லாஹ்(சுபஹ்) தொடர்ந்து தன் அருளைப் பொழிவான். அல்லாஹ்வின் மீதும் அவனுடைய இறை அருள்களின் மீதும் நன்றி கேடு காட்டாதீர்கள் அவனுடைய ஆன்மீக வெளிப்பாடுகளை வெறுப்புடன் நோக்காதீர்கள் [மேலும் இறை வெளிப்பாடுகளுடன் விளையாடாதீர்கள்]. ஹஸ்ரத் முஹம்மத்(ஸல்) அவர்களும், ஹஸ்ரத் மஸீஹே மவூத்(அலை) அவர்களும் மரணித்து விட்டார்கள், ஆனால் அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட அவர்களின் ஒளி அணையவில்லை அவ்வொளி தொடர்ந்து ஒளி வீசி உலகின் மூலை முடுக்குகளையெல்லாம் பிரகாசப்படுத்தும். ஆண், பெண் அனைவரையும் சரியான பாதையில் வழி நடத்தும். இந்த ஆன்மீக ஒளியின் கதிர்கள் அல்லாஹ்வின் ஃகலீஃபா - ஃகலீஃபத்துல்லாஹ் மூலமாக பிரதிபலிக்கின்றன. எனவே அல்லாஹ்வின் ஃகலீஃபாவை கைவிட்டால் ஒளியும் கிடைக்காது; உண்மையான வழிகாட்டுதலும் கிடைக்காது.

**எனவே, இதுவே உறக்கத்தை கைவிடுவதற்க்கும் செவியேற்காமல் இருப்பதை கைவிடுவதற்க்குமான நேரமாகும் [அல்லாஹ் மற்றும் அவனுடைய ஃகலீஃபாத்துல்லாஹ்வின் அழைப்பை நோக்கி]. வாருங்கள், இருளிலிருந்து வெளியே வாருங்கள், சூரியன் உதித்து விட்டது.**

உறக்கத்தில் இருக்காதீர்கள்! அல்லாஹ் (சுப்ஹ்) உங்கள் மீது கருணை காட்டுவானாக!ஈமானை வழங்குவானாக!. ஆமீன்! சும்ம ஆமீன்! யா ரப்புல் ஆலமீன்!

**Translated by:**

**S.H. Faisal**


**Editing & Publishing are done by**
***AMIR***
***JAMAAT - UL-SAHIH-AL-ISLAM***
***TAMIL NADU***
**Ph No: 917502272774**